DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 65/2016 |
| Deposition of Witness for | : | P.W.7 |
| Name | : | **திரு.முத்துக்கிருஷ்ணன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 2, 4, 8 மற்றும் 9 ஆஜர். 1, 3, 5, 6, 7, 10, 11, 12-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 3, 5, 6, 7, 10, 11, 12 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் இறுதியாக தமிழ்நாடு காவல் துறையில் பழையனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி கடந்த 31.03.2015ம் தேதியன்று பணி ஓய்வு பெற்று திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.01.2015ம் தேதி நான் பழையனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது அன்று காலை 9.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு வார்டு எண்.99-ல் உள்நோயாளியாக

சிகிச்சையிலிருந்த காயம் பட்ட கீழராங்கியத்தை சேர்ந்த முத்துக்கருப்பத்தேவர் மகன் சண்முகம் என்பவரிடம் விசாரிக்க அவர் ஒரு எழுத்து பூர்வமான புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார்.

2. நான் அந்த புகார் மனுவினை பெற்று நான் அன்றைய தினம் மதியம் 13.30 மணியளவில் பழையனூர் காவல்நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப பழையனூர் காவல்நிலையக் குற்ற எண்.10/2015 இதச பிரிவுகள் 147, 148, 294பி, 323, 324, 336, 307 இதச மற்றும் sec 3 of TNPPDL Actன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5** ஆகும்.

3. பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு நகல்களை விசாரணைக்காக பூவந்தி காவல்நிலைய ஆய்வாளர் திரு. செல்வராஜ் என்பவரிடம் நேரில் ஒப்படைத்தேன். மேலும் வழக்கு விசாரணையின்போது ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சண்முகம் கொடுத்த புகார் மனு ஏற்கனவே எழுதி வைத்திருந்தாரா என்றால் நான் விசாரணைக்கு சென்ற பின்னர் எழுதி கொடுத்தார். புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தேதியில் புகார்தாரர் சண்முகத்தை மட்டும் விசாரித்தேனா அல்லது வேறு யாரையும் விசாரித்தேனா என்றால் சண்முகத்தை தவிர வேறு யாரையும் விசாரிக்கவில்லை. அன்றைய தேதியில் அதே மருத்துவைனையில் சிகிச்சையிலிருந்த இந்த வழக்கின் எதிர் வழக்கை சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர் முருகானந்தம் என்பவரிடமும் விசாரித்து புகார் மனுவை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு மற்றும் எதிர் வழக்கு சம்மந்தமாக மருத்துவமனையில் எத்தனை பேர்கள் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் சொல்வது போல் புகார்தாரர் சண்முகம் புகார்

மனுவினை கொடுக்கவில்லை என்றும் யாரோ ஒருவர் கொடுத்த புகாரை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.23 18:11:33 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**